# தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், சென்னை 600 051

## 2017–18 கல்வியாண்டிற்கான இளநிலை பட்டப்படிப்புகளுக்கான சேர்க்கை அறிவிப்பு

பிவிஎஸ்ஸி & ஏஎச், பிடெக் (உணவுத் தொழில்நுட்பம்), பிடெக் (கோழியின தொழில்நுட்பம்), மற்றும் பிடெக் (பால்வளத் தொழில்நுட்பம்)

2017–18 ஆம் கல்வியாண்டிற்கான கீழ்க்கண்ட இளநிலை பட்டப்படிப்புகளில் சேர்க்கைக்கு தமிழ்நாட்டைச் சார்ந்த மாணவர்களிடமிருந்து **15.05.2017 காலை 10:00 மணி முதல் 05.06.2017 மாலை 06:00 மணி வரை இணையதளம் மூலமாக விண்ணப்பங்கள் (Online application)** வரவேற்கப்படுகின்றன:

| பட்டப்படிப்புகள் | மொத்த இடங்கள் | | கல்லூரி |
|---|---|---|---|
| **கால்நடை மருத்துவம் மற்றும் கால்நடை பராமரிப்பு பட்டப்படிப்பு –** BVSc & AH **5½ ஆண்டுகள்** (4½ ஆண்டுகள் + 1 வருட உள்ளிருப்பு பயிற்சி – *MSVE விதிமுறை 2016 ன்படி*) | **320** | 120* | சென்னை கால்நடை மருத்துவக் கல்லூரி<br>சென்னை – 600 007 |
| | | 80 | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்<br>நாமக்கல் – 637 002 |
| | | 60* | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்<br>திருநெல்வேலி – 627 358 |
| | | 60* | கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்<br>ஒரத்தநாடு – 614 625, தஞ்சாவூர் மாவட்டம் |
| **உணவுத் தொழில்நுட்ப பட்டப்படிப்பு –** BTech - Food Technology (4 ஆண்டுகள்) | **20** | | உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி<br>கோடுவளி, சென்னை – 600 052 |
| **கோழியின தொழில்நுட்ப பட்டப்படிப்பு** – BTech – Poultry Technology (4 ஆண்டுகள்) | **20*** | | கோழியின உற்பத்தி மற்றும் மேலாண்மைக் கல்லூரி<br>மத்திகிரி, ஓசூர் – 635 110 |
| **பால்வளத் தொழில்நுட்ப பட்டப்படிப்பு** – BTech – Dairy Technology (4 ஆண்டுகள்) | **20** | | உணவு மற்றும் பால்வளத் தொழில்நுட்பக் கல்லூரி<br>கோடுவளி, சென்னை – 600 052 |

** தமிழக அரசின் ஆணைக்கேற்ப மாற்றத்திற்கு உட்பட்டது*

*குறிப்பு: 1) BVSc & AHல் 15 சதவீத இடங்கள், இந்திய கால்நடை மருத்துவக் குழுவால் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கு ஒதுக்கப்பட்டுள்ளது*

*2) BTech ( Food Technology)ல் 15 சதவீத இடங்கள், இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது*

### I. இளநிலை பட்டப்படிப்புகளுக்கான சேர்க்கைத் தகுதிகள்

விண்ணப்பதாரர்கள் இணையதளம் மூலம் விண்ணப்பிக்கும் கடைசி தேதிக்குள்ளாக விண்ணப்பிக்க தேவையான அனைத்து தகுதிகளையும் பெற்றிருக்க வேண்டும். விண்ணப்பதாரர்கள் கல்வி தகுதி தேர்ச்சியை விண்ணப்ப கடைசி தேதிக்கு பிறகு பெற்றிருந்தால் அவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**அ. பிறப்பிடம் (Nativity):**

- விண்ணப்பதாரர்கள் தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்டிருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் 8ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை தமிழ்நாட்டில் படித்து தேர்ச்சி பெற்றிருந்தால் அவர்கள் பிறப்பிடச் சான்றிதழ் இணைக்கத் தேவையில்லை.
- தமிழ்நாட்டை பிறப்பிடமாக கொண்ட விண்ணப்பதாரர்கள் 8ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை பிற மாநிலங்களில் படித்து தேர்ச்சி பெற்றிருந்தால் தகவல் தொகுப்பேட்டில் (Prospectus) குறிப்பிட்டுள்ள வடிவத்தில் பிறப்பிடச் சான்றிதழ் **(Nativity certificate)** சமர்ப்பிக்க வேண்டும்

**ஆ. அடிப்படை கல்வித் தகுதியும் தேவையான குறைந்தபட்ச மதிப்பெண்களும்:**

விண்ணப்பதாரர்கள் மேல்நிலைக் கல்வி (10+2) அல்லது அதற்கு இணையான அங்கீகரிக்கப்பட்ட கல்வித்தேர்வில் தேர்ச்சி பெற்று, கீழே கொடுக்கப்பட்டுள்ள பாடங்களில் தேவையான மதிப்பெண்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

**(i) பிவிஎஸ்சி & ஏஎச் (BVSc & AH) இளநிலை பட்டப்படிப்பு**

**1. கலையியற்பிரிவில் (Academic Stream) பயின்றவர்கள்**

| மேல்நிலைக் கல்வி அல்லது அதற்கு இணையான தேர்வில் பயின்ற பாடங்கள் | தகுதிக்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள் (%) | | | |
|---|---|---|---|---|
| | **OC** | **BC/BCM** | **MBC/DNC** | **SC/SCA/ST** |
| 1. உயிரியல் அல்லது விலங்கியல் மற்றும் தாவரவியல் | 60 | 60 | 55 | தேர்ச்சி |
| 2. வேதியியல் மற்றும் இயற்பியல் இரண்டும் சேர்த்து | 60 | 60 | 55 | தேர்ச்சி |
| 3. மேலே உள்ள (1) மற்றும் (2)ம் சேர்த்து இதற்குக் குறைவாக இருத்தல் கூடாது | 70 | 65 | 60 | தேர்ச்சி |

**2. தொழிற்பிரிவில் (Vocational Stream) பயின்றவர்களுக்கு**

| மேல்நிலைக் கல்வி அல்லது அதற்கு இணையான தேர்வில் பயின்ற பாடங்கள் | தகுதிக்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள் (%) | | | |
|---|---|---|---|---|
| | OC | BC/BCM | MBC/DNC | SC/SCA/ST |
| 1. உயிரியல் | 60 | 60 | 55 | தேர்ச்சி |
| 2. தொழிற்பிரிவு பாடங்கள் **வேளாண் செயல்பாடுகள் / கோழிவளர்ப்பு / பால்வளம்** கருத்தியல் (Theory), செய்முறைத் தேர்வு I மற்றும் செய்முறைத்தேர்வு IIம் சேர்த்து (சதவீதத்தில்) | 60 | 60 | 55 | தேர்ச்சி |
| 3. (1) மற்றும் (2)ம் சேர்த்து மொத்த மதிப்பெண்கள் இதற்குக் குறைவாக இருத்தல் கூடாது | 70 | 65 | 60 | தேர்ச்சி |

**(ii) பிடெக் (உணவுத் தொழில்நுட்பம்) (BTech – Food Technology) / பிடெக் (கோழியின தொழில்நுட்பம்) (BTech - Poultry Technology) / பிடெக் (பால்வளத் தொழில்நுட்பம்) (BTech – Dairy Technology)**

| மேல்நிலைக் கல்வி அல்லது அதற்கு இணையான தேர்வில் பயின்ற பாடங்கள் | தகுதிக்கான குறைந்தபட்ச மதிப்பெண்கள் (%) | | | |
|---|---|---|---|---|
| | OC | BC/BCM | MBC/DNC | SC/SCA/ST |
| 1. கணிதம் | 60 | 60 | 55 | தேர்ச்சி |
| 2. உயிரியல் | 60 | 60 | 55 | தேர்ச்சி |
| 3. வேதியியல் மற்றும் இயற்பியல் இரண்டும் சேர்த்து | 60 | 60 | 55 | தேர்ச்சி |
| 4. மேலே உள்ள (1), (2) மற்றும் (3)ம் சேர்த்து மொத்த மதிப்பெண்கள் இதற்குக் குறைவாக இருத்தல் கூடாது | 70 | 65 | 60 | தேர்ச்சி |

**இ. கல்வித்தகுதி பெற எடுத்துக் கொண்ட முயற்சி எண்ணிக்கை (Number of attempts):**

**SC / SCA / ST மாணவர்கள் – 3, பிற மாணவர்கள் – 2.**

கல்வித் தகுதிக்கான முன்னேற்ற மதிப்பெண்கள் (Improvement marks) எந்த வருடமாக இருந்தாலும் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது.

**ஈ. வயது வரம்பு:**

- விண்ணப்பதாரர்கள் பதினேழு (17) வயது 31.12.2017 அன்று பூர்த்தியாகி இருக்க வேண்டும்.
- விண்ணப்பதாரர்கள் 01.07.2017 அன்று கீழ்காணும் வயது வரம்பினை பூர்த்தியாகி இருக்கக்கூடாது:

| | | |
|---|---|---|
| தாழ்த்தப்பட்ட வகுப்பு / தாழ்த்தப்பட்ட வகுப்பு (அருந்ததியர்) / பழங்குடியினர் **(SC/SCA/ST)** | : | **வயது வரம்பில்லை** |
| மற்றவர்கள் | : | **21 வயது** |

- **எக்காரணத்தைக் கொண்டும் வயது வரம்பினை தளர்த்த இயலாது.**

## II. தேர்வு செய்யப்படும் முறை:

விண்ணப்பதாரர்கள் மேல்நிலைக் கல்வி அல்லது அதற்கு இணையான அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தேர்வில் பெற்றுள்ள மதிப்பெண்கள் மற்றும் தமிழக அரசின் இடஒதுக்கீட்டு கொள்கையை அடிப்படையாகக் கொண்டு தேர்வு செய்யப்படுவார்கள்.

## III. இணையதளம் மூலமாக விண்ணப்பிக்கும் முறை (Online Application):

- விண்ணப்பதாரர்கள் **www.tanuvas.ac.in, www2.tanuvas.ac.in** என்னும் இணையதளத்தில் தமது விண்ணப்பங்களை **15.05.2017 காலை 10:00 மணி முதல் 05.06.2017 மாலை 06:00 வரை** சமர்ப்பிக்கலாம்.
  **இணையதள விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். பிற வடிவ விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**
- விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்கும்போது அவர்களுக்கென தனியான **நுழைவு அடையாள எண் (Login ID) மற்றும் கடவுச்சொல் (Password)** வழங்கப்படும். அதனை உபயோகித்து தமது விண்ணப்பங்களை பூர்த்தி மற்றும் மாற்றம் செய்து சமர்ப்பிக்கலாம்.
- பிவிஎஸ்சி & ஏஎச் (BVSc & AH), பிடெக் (உணவுத் தொழில்நுட்பம்) (BTech – Food Technology), பிடெக் (கோழியின உற்பத்தித் தொழில்நுட்பம்) (BTech - Poultry Technology) மற்றும் பிடெக் (பால்வளத் தொழில்நுட்பம்) (BTech – Dairy Technology) ஆகிய பட்டப்படிப்புகளுக்கு ஒரே விண்ணப்பத்தின் மூலமாக சமர்ப்பித்து கீழ்க்கண்ட கட்டணத்தை இணையதள முறையில் செலுத்த வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட பட்டப்படிப்புகளுக்கு விண்ணப்பம் செய்யவிருக்கும் விண்ணப்பதாரர்கள், அவற்றிற்கென தனித்தனியே இருக்கும் பாடப்பிரிவை தேர்வு செய்தால் போதுமானது.

| விண்ணப்பிக்கும் பட்டப்படிப்புகளின் எண்ணிக்கை | இணைய தளத்தின் மூலமாக செலுத்த வேண்டிய விண்ணப்பத்திற்கானக் கட்டணம் | |
|---|---|---|
| | SC / SCA /ST பிரிவினருக்கு | மற்ற பிரிவினருக்கு |
| ஒன்று | ரூ. 350/– | ரூ. 700/– |
| இரண்டு | ரூ. 700/– | ரூ. 1400/– |
| மூன்று | ரூ. 1050/– | ரூ. 2100/– |
| நான்கு | ரூ. 1400/– | ரூ. 2800/– |

- விண்ணப்பத்தாரர்கள் தமக்குரிய சரியான விண்ணப்பக் கட்டணத்தை (அ) பற்று அட்டை – Debit Card (ஆ) கடன் அட்டை – Credit Card (இ) இணைய வங்கியியல் – Internet Banking மற்றும் (ஈ) உடனடி பணம் செலுத்தும் சேவை – IMPS மூலமாக சமர்ப்பிக்கலாம்.

  **பிற வழி விண்ணப்பக் கட்டணங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.**
- விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களை சமர்ப்பித்தவுடன் அவர்களுக்கு அலைபேசியில் குறுஞ்செய்தி (SMS) மற்றும் மின்னஞ்சலில் செய்தி (e-mail) அனுப்பப்படும்.
- விண்ணப்பதாரர்கள் இணையதளத்தில் விண்ணப்பம் சமர்ப்பித்து கட்டணத்தை செலுத்தியவுடன், பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை பதிவிறக்கம் (Download) செய்ய வேண்டும். ஒரு பட்டப்படிப்பிற்கு மேல் விண்ணப்பித்திருந்தால், ஒவ்வொரு விண்ணப்பத்தையும் மடிக்காமல் (unfolded cover) தகுந்த சான்றிதழ் நகல்களுடன் தனித்தனியாக பட்டப்படிப்பின் பெயரைக் குறிப்பிட்ட உறையில் ஒட்டி, அனைத்து விண்ணப்ப உறைகளையும் (cover) ஒரு பெரிய உறையில் வைத்து

**தலைவர், சேர்க்கைக் குழு (இளநிலை பட்டப்படிப்பு)**
**தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்**
**மாதவரம் பால்பண்ணை, சென்னை – 600 051**

அவர்களுக்கு **12.06.2017 ஆம் தேதி மாலை 5:45 மணிக்குள்** கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.

- **இணையதள விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும். பிற வடிவ விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.**
- **கடைசி தேதிக்கு பிறகு கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் அனைத்தும் நிராகரிக்கப்படும்.**

  **தபால் தாமதத்திற்கு பல்கலைக்கழகம் பொறுப்பேற்காது.**
  ஆகவே, விண்ணப்பதாரர்கள் கடைசி தேதியை கணக்கில் கொண்டு அதற்கேற்றவாறு முன்பே சமர்ப்பிக்க வேண்டும்.

**அயல்நாடு வாழ் இந்தியர் (NRIs) / அயல்நாடு வாழ் இந்தியரின் குழந்தைகள் (Wards of NRIs) / அயல்நாடு வாழ் இந்தியரின் நிதி ஆதரவு பெற்றோர் (NRI Sponsored), அயல்நாட்டினர் (Foreign National) மற்றும் காஷ்மீர் மாநிலத்திலிருந்து புலம் பெயர்ந்தவர்களுக்கான (Jammu and Kashmir including Kashmir Migrants)** இட ஒதுக்கீடு, விண்ணப்பப் படிவங்கள், வழிமுறைகள் மற்றும் இதர விவரங்களை பல்கலைக்கழகத்தின் இணையதளத்தில் (**www.tanuvas.ac.in**) அறிந்து கொள்ளலாம். அவர்களுக்கு இளநிலை கால்நடை மருத்துவம் மற்றும் கால்நடை பராமரிப்பு மற்றும் பிடெக் (உணவு தொழில்நுட்பம்) பட்டப்படிப்புகளில் கீழ்க்காணும் இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன:

| பட்டப்படிப்புகள் | ஒதுக்கப்பட்டுள்ள இடங்கள் | | |
|---|---|---|---|
| | அயல்நாடுவாழ் இந்தியர் (NRIs / Wards of NRIs / NRI Sponsored) | அயல்நாட்டினர் (Foreign Nationals) | காஷ்மீர் மாநிலத்திலிருந்து புலம் பெயர்ந்தவர் (Jammu and Kashmir including Kashmir Migrants) |
| பிவிஎஸ்சி & ஏஎச் | 9 | 5 | 2 |
| பிடெக் (உணவு தொழில்நுட்பம்) | 2 | 2 | – |

**தலைவர்**
**தேர்வுக் குழு (இளநிலை பட்டப் படிப்பு)**
**தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம்**
**சென்னை – 600 051**

இடம்: சென்னை – 600 051
நாள் : 14–05–2017